ஊடகவியல் பயிற்சிப் பட்டறை – நிறைவு விழா

கரந்தைத் தமிழ்ச் சங்கம் – தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி மற்றும் தமிழ் உயராய்வு மையம் இணைந்து நடத்திய “ஊடகவியல் பயிற்சிப் பட்டறை” 2026 செப்டம்பர் 7 முதல் 22 வரை நடைபெற்றது.

இதன் நிறைவு விழா மற்றும் மலர் வெளியீட்டு நிகழ்வு 22.09.2026 அன்று காலை 11.30 மணியளவில் நடைபெற்றது. நிகழ்வில் தமிழ்த்துறை பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்விற்கு முனைவர் சீ. மகேசுவரி அவர்கள் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் வரவேற்புரை வழங்கினார். விழாவிற்கு முனைவர் இரா. இராசாமணி, முதல்வர், த.உ.க. கலைக்கல்லூரி அவர்கள் தலைமையேற்றார்.

முன்னிலை முனைவர் சு. செர்ணரோகா அவர்கள் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் முனைவர் சே. தெய்வக்கண்ணி அவர்கள் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து திரு. இரா. சுந்தரவதனம், செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம் மற்றும் திரு. சு. செந்தமிழ்ச் செல்வன், நிறைவேற்றுக் குழு உறுப்பினர், கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

“கடந்த ஆண்டு பயிற்சிப் பட்டறையின் விழா மலரை வெளியிட்டுச் திரு. கு. சந்திரன், உதவி இயக்குநர், தமிழ்வளர்ச்சித் துறை, தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

மேலும், “சான்றிதழ்கள் வழங்கிச் முனைவர் இரா. காமராசு, நாட்டுப்புறவியல் துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக்கழகம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்.

இந்நிகழ்வில் இணைப்புரையாக முனைவர் ப. ஜெயராஜ் மற்றும் நன்றியுரையாக முனைவர் சா.மு. ஜெயன்பு பர்வின் ஆகியோர் சிறப்பாக நடத்தினார்கள். ஒருங்கிணைப்பாளர்களாக முனைவர் சீ.மகேசுவரி முனைவர் ப.ஜெயராஜ் முனைவர் ந.எழிலரசன் முனைவர் ச.கிருத்திகா முனைவர் சா.மு. ஜெயன்பு பர்வின் முனைவர் கோ.மாணிக்கவதி தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்கள் செயல்பட்டனர்.

இப்பயிற்சிப் பட்டறையின் மூலம் ஊடகவியல் சார்ந்த பல்வேறு கருத்துகள், ஆய்வு முறைகள் மற்றும் தமிழியல் தொடர்பான அறிவுகளைப் பெறுவதற்கான வாய்ப்பு மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு கிடைத்தது. பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், விழா சிறப்பாக நிறைவுற்றது.

மொத்தத்தில், தமிழியல் மற்றும் ஊடகவியல் சார்ந்த அறிவைப் பரப்புவதற்கும், ஆய்வு ஆர்வத்தை வளர்ப்பதற்கும் இப்பயிற்சிப் பட்டறை பயனுள்ள கல்வி நிகழ்வாக அமைந்தது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்